## மே - 21 - உயிர்ப்புக் கால 6ம் வார ஞாயிறு

### "நீங்கள் என்மீது அன்பு கொண்டிருந்தால் என் கட்டளைகளை கடைப்படிப்பீர்கள்"

**முதல் வாசகம் : திருத்தூதர் பணி 8 : 5 – 8,14 – 17**

அக்காலத்தில் பிலிப்பு சமாரியா நகர் சென்று அங்குள்ள மக்களுக்கு மெசியாவைப்பற்றி அறிவித்தார். பிலிப்பு சொன்ன வற்றைக் கேட்டும் அவர் செய்த அரும் அடையாளங்களைக் கண்டும் வந்த திரளான மக்கள் ஒரு மனத்தோடு அவருக்குச் செவிசாய்த்தனர். ஏனெனில் பலரைப் பிடித்திருந்த தீய ஆவிகள் அவர்களிடமிருந்து உரத்தக் குரலுடன் கூச்சலிட்டுக் கொண்டே வெளியேறின. முடக்குவாதமுற்றோர், கால் ஊனமுற்றோர் பலரும் குணம் பெற்றனர். இதனால் அந்நகரில் பெரும் மகிழ்ச்சி உண்டாயிற்று. சமாரியர் கடவுளின் வார்த்தையை ஏற்றுக்கொண்டனர் என்பதை எருசலேமிலுள்ள திருத்தூதர்கள் கேள்விப்பட்டு, பேதுருவையும் யோவானையும் அவர்களிடம் அனுப்பி வைத்தார்கள். அவர்கள் சென்று சமாரியர் தூய ஆவியால் ஆட்கொள்ளப்படுமாறு இறைவனிடம் வேண்டினார்கள். ஏனெனில் அதுவரை அவர்களுள் யாருக்கும் தூய ஆவி அருளப்படவில்லை. ஆண்டவராகிய இயேசுவின் பெயரால் அவர்கள் திருமுழுக்கு மட்டுமே பெற்றிருந்தார்கள். பின்பு பேதுருவும் யோவானும் தங்கள் கைகளை அவர்கள்மீது வைக்கவே அவர்கள் தூய ஆவியைப் பெற்றார்கள்.

**பதில்பாடல் :** அனைத்துலகோரே கடவுளைப் போற்றி ஆர்ப்பரியுங்கள்

**இரண்டாம் வாசகம் : 1பேதுரு: 3 – 15 – 18**

அன்பிற்குரியவர்களே! உங்கள் உள்ளத்தில் கிறிஸ்துவை ஆண்டவராகக் கொண்டு அவரைத் தூயவரெனப் போற்றுங்கள். நீங்கள் எதிர்நோக்கி இருப்பதைக் குறித்து யாராவது விளக்கம் கேட்டால் விடையளிக்க நீங்கள் எப்பொழுதும் ஆயத்தமாய் இருங்கள். ஆனால், பணிவோடும் மரியாதையோடும் விடை அளியுங்கள். உங்கள் மனச்சான்றும் குற்றமற்றதாயிருக்கட்டும். அப்பொழுது உங்கள் கிறிஸ்தவ நன்னடத்தையைப் பழிக்கிறவர்கள் உங்களை இழிவாகப் பேசியதைக் குறித்து வெட்கப்படுவார்கள். ஏனெனில், தீமை செய்து துன்புறுவதை விட, கடவுளுக்குத் திருவுளமானால், நன்மை செய்து துன்புறுவதே மேல். கிறிஸ்துவும் உங்கள் பாவங்களின் பொருட்டு ஒரே முறையாக இறந்தார். அவர் உங்களைக் கடவுளிடம் கொண்டு சேர்க்கவே இறந்தார். நீதியுள்ளவராகிய அவர் நீதியற்றவர்களுக்காக இறந்தார். மனித இயல்போடிருந்த அவர் இறந்தாரெனினும் ஆவிக்குரிய இயல்புடை யவராய் உயிர் பெற்றெழுந்தார்.

**நற்செய்தி : யோவான் 14 : 15 – 21**

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது:, "நீங்கள் என்மீது அன்பு கொண்டிருந்தால் என் கட்டளைகளைக் கடைப்பிடிப்பீர்கள். "உங்களோடு என்றும் இருக்கும் படி மற்றொரு துணையாளரை உங்களுக்கத் தருமாறு நான் தந்தையிடம் கேட்பேன். அவரே உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார். உலகம் அவரை ஏற்றுக்கொள்ள இயலாது. ஏனெனில் அது அவரைக் காண்பதுமில்லை, அறிவதுமில்லை. நீங்கள் அவரை அறிந்திருக்கிறீர்கள். ஏனெனில் அவர் உங்களோடு தங்கி யிருக்கிறார் உங்களுக்குள்ளும் இருக்கிறார். நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடமாட்டேன். உங்களிடம் திரும்பி வருவேன். இன்னும் சிறிது காலத்தில் உலகம் என்னைக் காணாது. ஆனால் நீங்கள் என்னைக் காண்பீர்கள். ஏனெனில் நான் வாழ்கிறேன் நீங்களும் வாழ்வீர்கள். நான் தந்தையுள்ளும் நீங்கள் என்னுள்ளும் நான் உங்களுள்ளும் இருப்பதை அந்நாளில் நீங்கள் அறிந்து கொள்வீர்கள். என் கட்டளைகளை ஏற்றுக் கடைப்பிடிப்பவர் என்மீது அன்பு கொண்டுள்ளார். என்மீது அன்பு கொள்பவர்மீது தந்தையும் அன்பு கொள்வார். நானும் அவர் மீது அன்பு கொண்டு அவருக்கு என்னை வெளிப்படுத்துவேன்" என்றார்.

**தியானம்:** எமது வாழ்வின் ஒவ்வொரு நிகழ்விலும் கடவுளின் அன்பை நாம் காணவேண்டும். "என் அன்பில் நிலைத்திருங்கள், கட்டளைகளைக் கடைப்பிடியுங்கள்" என்னும் போதனை அதுதான். இறைவனது அன்பை அறிந்துணர்வோமானால் அவரது கிருபை நமக்குக் கிடைக்கும். எம்முடைய காயங்களை அவரது அன்பு குணமாக்கும். குறிப்பாக இன்றைய வாசகங்கள் எமது சொந்த வாழ்விலும் இருக்க வேண்டிய கீழ்ப்படிதல் தூய ஆவியானவரின் முகியத்துவம் என்பவற்றை உறுதிப்படுத்துகின்றன. "நீங்கள் என்மீது அன்பு கொண்டிருந்தால் என் கட்டளைகளைக் கடைப்பிடிப்பீர்கள்.( யோவா. 14:15). யோவான் நற்செய்தியைப் பொறுத்தவரை இயேசுவை அன்பு செய்வதென்பது இயேசுவின் கட்டளைகளை கடைப்பிடித்து வாழ்வதுதான். கீழ்ப்படிதலின் வழியாகத்தான் சீடர்கள் இயேசுவைப்பற்றிய நற்செய்தியை பிறருக்கு கொடுக்க முடியும். இயேசு ஒரு துணையாளரையும் அவர்களுக்கு அனுப்பி வைப்பதாக வாக்களிக்கின்றார். நற்செய்திப்பணியில் வருகின்ற துன்பங்களையும், எதிர்ப்புக்களையும் திடமனதுடன் ஏற்று இயேசுவின் சாட்சிகளாக வாழ்வதற்கு தூய ஆவியானவரின் துணை தேவை, ஆதித்திருச்சபையில் திருத்தூதர்களுக்கு துணையாக தூய ஆவியானவரின் வியத்தகு செயல்களை நாம் முதல் வாசகத்தில் காண்கின்றோம். ஆகவேதான் நாமும் கடவுளுடைய கட்டளைகளை ஏற்றுக் கொண்டு அவரில் நம்பிக்கை கொள்கின்றோம். எம்மை நாம் எவ்வாறு அன்பு செய்கின்றோமோ அதேபோல் பிறரையும் அன்பு செய்து வாழ்வோம். தூய ஆவியாரை எமது வாழ்வின் வழியாகவும், தந்தை மகனோடு இணைக்கும் பாலமாகவும் ஏற்றுக்கொள்வோம். அன்பு என்ற வல்லமையில் நிலைபெற்று ஆக்கமும், ஆற்றலும் நிறைந்த அர்த்தமுள்ள வாழ்க்கை வாழ்வோம்.